# Childbirth Rituals Among the Amarachipatti Community

**P. Lakshmanan**
*Ph.D. Researcher, Department of Tamil*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. N. Stephen**
*Head of Department (Pt)*
*Department of Tamil, Manonmaniam Sundaranar University, Tirunelveli*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346703

**Abstract**

*From birth to death, humans have always associated beliefs with every life event. Belief is the acceptance of something as true. Those aspects of life that humans accept as truth can be considered as beliefs. In cultural terms, a belief is something that has developed and solidified over time. Customs and practices arise based on these beliefs. Across all regions of the world and among all civilizations, rituals have been performed throughout history. This study focuses on the beliefs of the Amarachipatti community and the rituals carried out based on these beliefs, specifically in the context of childbirth.*

**References**

1. K. A. Jothimani, 2005. Life and Rituals of the Palaiyar Community of Ancient Tamil Nadu, Kavya Publications, Chennai–24.
2. K. A. Jothimani, 1996. Ritual Songs, Poombukar Publications, Chennai–108.

# ஆராய்ச்சிபட்டி மக்களிடத்தில் காணப்படும் குழந்தை பிறப்புச் சடங்குமுறைகள்

***பெ. லட்சுமணன்***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், திருநெல்வேலி

***பேரா. ஞா. ஸ்டீபன்***
மேனாள் துறைத் தலைவர் (ப.நி), தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***
*மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை நிகழ்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பின்புலமாக நம்பிக்கையை வைத்துள்ளான். நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக் கொள்வதே ஆகும். மனித இனம் உண்மை என்று ஏற்றுக் கொள்கின்ற சிலவற்றை நம்பிக்கை எனலாம். மனித வாழ்க்கையின் பண்பாட்டு நிலையில் வளர்ந்து விட்ட ஒன்றே நம்பிக்கை ஆகும். நம்பிக்கையின் அடிப்படையில் தான் பழக்கவழக்கங்களும் உருவாகின்றன. உலகின் எல்லா பகுதிகளிலும் நாகரிகத்தின் கீழ் உள்ளவர்களிடையிலும் எல்லா காலங்களிலும் சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. ஆராய்ச்சிபட்டி மக்களின் நம்பிக்கைகளையும் நம்பிக்கையின் காரணமாக நிகழ்த்தும் சடங்குகளையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.*

## முன்னுரை

அறிவியல் நாகரீகம் வளர்ச்சி அடைந்து வரும் அந்நாளிலே மக்களின் வாழ்க்கையும் பல்வேறு மாறுபாடுகளை கொண்டுள்ளது. எனினும் பண்டைக் காலத்தில் இருந்து வழி வழியாகப் பின்பற்றி வரும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் போன்றவை இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. நன்மையின் பால் உள்ள ஆர்வமும்தீயின் பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகளுக்கு அடிப்படை எனலாம். நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையில் இருந்து மற்றொரு தலைமுறையினருக்கு பரவி வருகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித நம்பிக்கைகளை கொண்டிருப்பதை காணலாம். மனிதன் வாழ்க்கை முழுவதும் நம்பிக்கையின் அடிப்படையில் ஏதாவது ஒரு சடங்கை செய்து நிறைவு அடைகிறான். ஆராய்ச்சிபட்டி மக்களிடத்தில் காணப்படும் குழந்தை பிறப்பு சடங்குகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

## ஊர் அமைவிடம்

திருநெல்வேலியிலிருந்து சங்கரன் கோவில் செல்லும் சாலையில் திருமலாபுரம் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூர்க்கு கிழக்கே சுமார் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் ஆராய்ச்சிபட்டி என்னும் கிராமம் அமைந்துள்ளது.

## சேனை கொடுத்தல்

பிறந்த குழந்தைக்கு முதன் முதலில் வாயில் இனிப்பைத் தொட்டு வைக்கும் வழக்கம் அனைவரிடமும் காணப்படுகின்றது. ஆராய்ச்சிபட்டி ஊர் மக்கள் அதை ஒரு

சடங்காகவே செய்கிறார்கள். எவ்வாறு எனில் சேனைப்பால் கொடுக்கும் உரிமைதாய் பிறந்த வீட்டில் உள்ளவர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அதிலும் தாய் மாமனுக்கு உரித்தானதாகும். தன் உடன் பிறந்தவர்களைப் போல் தன் பிள்ளையையும் ஆசாபாசத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக சேனைப்பால் கொடுப்பது வழக்கமாக உள்ளது. நாட்டுக் கருப்பட்டியைக் கரைத்து குழந்தையின் தாய் மாமன் துளித்துளியாய் குழந்தையின் வாயில் ஊட்டுகிறார்கள். முதன்முதலாக அக்குழந்தைக்கு கருப்பட்டிப்பாலை யார் ஊட்டுகிறாரோ அவர்களின் குணநலன்கள் தான் குழந்தைக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை இவ்வூர் மக்களிடம் காணப்படுகின்றது.

**எண்ணெய்க் குளியல் சடங்கு**

குழந்தை பிறந்த ஐந்தாவது அல்லது ஏழாவது நாளன்று காலையில் உச்சி முதல் பாதம் வரை நன்றாக நல்லெண்ணெய் (எள் எண்ணெய்) உடம்புக்கு தேய்த்துக் குளிக்கச் செய்வார்கள். உடம்புக்கு எண்ணெய் தேய்த்ததும் கண்களுக்கு எண்ணெய் கட்டுவார்கள். எப்படி என்றால் விளக்கெண்ணையை (ஆமணக்கு எண்ணெய்) வீட்டில் உண்டாக்கிய எண்ணெய் மட்டும் பயன்படுத்துவார்கள். விளக்கெண்ணையை இரண்டு கண்களிலும் ஒரு சங்கு அளவு விட்டு நன்றாக கண்களை மூடி திறந்து, மூடி திறந்து அதன் பிறகு குளிக்க செய்வார்கள். அன்றைய நாளில் கொஞ்சம் இஞ்சி சாறினை தாய்க்கும “குழந்தைக்கும் கொடுக்கிறார்கள். இவ்வாறு கொடுப்பதன் மூலம் குழந்தையின் அன்றாடம் குடிக்கின்ற பால் உணவு சீரணிக்க வேண்டும் என்பதற்காக கொடுப்பதாக இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

**பெயரிடுதல் சடங்கு**

குழந்தை பிறந்த மூன்றாவது மாதம் அல்லது ஒன்பதாவது மாதத்தில் குழந்தை தன்னுடைய தகப்பனார் வீட்டிற்கு சென்றதும் அல்லது அக்குழந்தையின் தாய் வீட்டில் வைத்தும் பெயரிடுதல் சடங்கினை செய்கின்றனர். குழந்தையினுடைய தந்தை அல்லது தாயின் பெற்றோர்களின் பெயர் அல்லது குலதெய்வத்தின் பெயரைவைக்கின்ற வழக்கம் இவ்வூர் மக்களிடம் காணப்படுகின்றது. சிலர் பெயரிடும் சடங்கினை பெயர் சூட்டும் விழாவாக கொண்டாடுகிறார்கள். குழந்தை பிறந்த முப்பதாவது நாளும் பெயர் வைக்கிறார்கள் என்று தரவாளர் கூறுகின்றார். ஆனால் இன்றைய நவீன உலகில் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தையை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பே அக்குழந்தைக்குப் பெயர் வைத்து அதை மருத்துவமனையில் கூறி பிறப்புச் சான்றிதழை பெற்றும் செல்லும் நடைமுறை வந்து விட்டதாகவும் தரவாளர் கூறுகிறார்.

**தரவாளரின் பெயர் : முத்தம்மாள்**
**வயது : 69**
**ஆய்வுக் களம் : ஆராய்ச்சிப்பட்டி**
**நேரம் : இரவு 9 மணி**

**முடி எடுக்கும் விழா**

குழந்தை பிறந்த ஒரு வயது அல்லது மூன்றாவது வயதில் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று முடி எடுக்கும் நிகழ்ச்சியை பிறந்த முடியினை எடுக்கும் வழக்கமாக குறிப்பிடுகின்றனர். இச்சடங்கில் தாய்மாமன் சீரும் அக்குழந்தைக்குக் கொண்டு வருகின்ற வழக்கமும் காணப்படுகின்றது.

**காதணி விழா**

ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் காதுகுத்துகின்ற வழக்கம் காணப்படுகின்றது. காது குத்தும் போது காதில் அணியும் அணிகலன் தாய்மாமன் எடுத்து வரவேண்டும் என

சொல்லப்படுகின்றது. தன்னுடைய வசதிக்கு ஏற்ப அணிகலன்கள் (கம்மல்) எடுக்கிறார். குாதணி விழாவின் போது “காப்பரிசி” கொடுக்கின்ற வழக்கமும் காணப்படுகின்றது.

காப்பரிசி - தனது நிலத்தில் விளைந்த நெல்லரிசி, காணம் (கொள்ளு), கம்பு, சோளம் இவைகளை வறுத்து அப்படியே ஊறவைத்து தேங்காய் துறுவல், நாட்டுக் கருப்பட்டி சேர்ந்த கலவையை குலதெய்வத்திற்குப் படைத்துவிட்டு மக்களுக்கு கொடுக்கிறார்கள்.

### செவனாமருந்து (சிவன் மருந்து)

பிறந்த குழந்தைக்கு முதன் முதலில் கொடுக்கப்படும் மருந்து இந்த செவனா மருந்து தான். இந்த மருந்து குழந்தை பிறந்த முப்பதாவது நாள் கொடுக்கிறார்கள். எப்படியென்றால் தாய்க்கு சுகப்பிரசவமாக குழந்தை பிறந்தாலும், அறுவை சிகிச்சை மூலமாக பிறந்தாலும் குழந்தை பிறந்த ஏழாவது நாளில் இருந்தே நாட்டுக்கோழிசாறு (வெடக்கோழி) கொடுப்பது வழக்கம். ஏழாவது நாளில் முதல் கோழியை நறிக்கி மருந்து பொருட்களை அரைத்து கறியுடன் சேர்த்து கொதிக்கவைத்து பச்ச எண்ணெய் ஒரு கரண்டி ஊற்றி மாலையில் தாய்க்கு இளஞ்சுட்டுடன் கொடுப்பார்கள். இப்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொடுப்பார்கள். 29 வது நாள் கொடுக்கப்படும் கோழியின் இரைப்பையில் இருந்து ஒரு கல் எடுத்து ஒரு துணியில் முடிந்து குலதெய்வத்தை வணங்கும் இடத்தில் வீட்டின் ஒரு மூலையில் வைத்துவிடுவார்கள். மறுநாள் அதாவது முப்பதாவது நாள் காலையில் அந்த கல்லை எடுத்து அதனுடன் ஓமம் சிறிதளவு, காயம் சிறிதளவு, செவனாம்பு வேர் (காடுகளில் வளரக்கூடிய ஒரு செடி வகையாய் சார்ந்தது) போன்ற பொருட்களை தலைவாசல் படியில் வைத்து அரைத்து (தலைவாசல் படியில் வைத்து எதற்கு அரைக்கிறீர்கள் என்று கேட்டபோது தரவாளர் சொன்ன பதில் தலைவாசல் படியை குலதெய்வத்தின் அம்சமாக கருதுவதால் அந்த மருந்துக்கு பலன் அதிகம் என்கிறார்) அதனை குழந்தைக்கு சிறிதளவு கொடுப்பதாக கூறுகிறார்கள். மேலும் இவ்வாறு கொடுப்பதனால் குழந்தைக்கு வயிற்றில் செரிமான பிரச்சனை வராது என்றும், வயிற்றுப் போக்கு, குடல் பிறழுதல், தொக்கம் விழுதல் போன்ற எந்த தொந்தரவும் வராது என்றும் கல்லை விழுங்கினாலும் கரைந்து விடும் என்றும் ஊர 'மக்களும் தரவாளரும் நம்பிக்கை கொள்கின்றனர்.

சேவனா மருந்து நாளடைவில் சொல் மருவி இன்றைய வழக்கத்தில் சிவன் மருந்தாக சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய தலைமுறையினருக்கு இது தெரியாத ஒன்றாக இருக்கிறது. கள ஆய்வின்போது பக்கத்து ஊர்களைக் காட்டிலும் இந்த செவனா மருந்தை இவ்வுர் மக்கள் இன்றைய கால கட்டத்திலும் புழக்கத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகின்றது.

### தொகுப்புரை

இவ்வகையில் ஆராய்ச்சிபட்டி மக்களிடம் காணப்படும் குழந்தை பிறப்பு சடங்கு பல தனித்துவமான சிறப்பம் சங்களை கொண்டதாக அமைகின்றது. குழந்தைக்கு சேனை கொடுப்பது தமிழர் வழக்கமாக இருந்தாலும் சீன தண்ணி கொடுக்காமல் நாட்டு கருப்பட்டியை உரசி அதை எடுத்து தாய்மாமன்மார்களே கொடுக்க வேண்டும் என்பது சிறப்பாக அமைகின்றது. இன்றைய நவீன உலகத்தில் குழந்தைகளுக்கு யாரும் கண்களுக்கு எண்ணெய் கட்டுவது சிவன் மருந்து கொடுப்பது போன்ற வழக்கம் மறைந்து கொண்டே போகிறது. ஆனால் இவ்வூர் மக்கள் அதை ஒரு சடங்கு முறையாகவே வாழ்வியலோடு தொடர்புபடுத்தி இருக்கிறார்கள் என்பதை நாம் காண முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. க. அ. ஜோதிராணி. 2005. பழந்தமிழர் பறையர் மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள். காவ்யா பதிப்பகம், சென்னை-24.
2. கே. ஏ. ஜோதிராணி. 1996. சடங்குப் பாடல்கள். பூம்புகார் பதிப்பகம், சென்னை-108.